# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.558/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-4/PW- 4 | Village: |
| Name : செல்வமணி | Age :53 |
| Father's/Husband's Name : தையான் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13.11.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது அழகிரிநாதன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எல்ஜசி முகவராக வேலை செய்து வருகிறேன், கடந்த 05.04.2015 ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் நான் சோழபுரத்திலிருந்து அணைக்குடியில் உள்ள எனது வீட்டிற்கு வந்தேன். அப்போது எங்கள் தெருவிற்கு முன்பாக கூட்டமாக சில நபர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னவென்று கேட்டபோது அந்த இடத்தில் ஆட்டோ கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாகவும், அடிபட்ட நபர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளதாகவும் கூறினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 05.04.2015 ம் தேதி மதியம் 1 மணியளவில் நான் வெளியூர் சென்றுவிட்டு வேப்பத்தூரிலிருந்து அழகிரிநாதன்பேட்டையில் உள்ள ஓட்ட வாய்க்கால் எதிரில் வந்து கொண்டிருந்தபோது எனக்கு எதிரே வந்த TN68M9694 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவை ஓட்டி வந்த ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ஆட்டோவை ஆற்றுக்குள் கவிழ்த்து விபத்து ஏற்படுத்தினார் என்றும் விபத்தில் காயம்பட்ட நபர்களை நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**